

மறைந்த தி.மு.க . செய்தி தொடர்பு மாநில துணைச்செயலாளர் கோவை செல்வராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை, அவரது இல்லத்தில் தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில், மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக், தொஅ.ரவி, தளபதி முருகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மாநகராட்சி மேயர் ரங்கநாயகி, மாவட்ட துணைச்செயலாளர்கள் ஜெயந்தி, கல்பனா செந்தில், வடக்கு மாவட்ட பொருளாளர் ரகுமான் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் ராஜேந்தர், சோமு என்ற சந்தோஷ், பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ், வி.ஜி.கோகுல் தமிழ்மறை, தெய்வயானை தமிழ்மறை, போனஸ் பாபு, சரத், சந்திரசேகர், காங்கிரஸ் சார்பில் ஹரிஹரசுதன், கருணாகரன், திமுக நிர்வாகிகள் ஜின்னா, பழக்கடை முத்துமுருகன், சிவராமன், சிடிடி பாபு, செந்தில் கார்த்திகேயன், கோவை அருண் ,உசேன், செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஆலோசனைக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். உடன் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணை செயலாளர் ராஜேந்திரன்,மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினர் பி.எஸ்.சரவணன்,மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, ஒன்றியச் செயலாளர்கள் இல.கிருஷ்ணன்,ஏரியூர்.செல்வராஜ், மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### தூள்செட்டி ஏரி கால்வாய் பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும்!

# திராவிட மாடல் அரசின் திட்டங்கள் அனைத்து மக்களையும் சென்றடைந்துள்ளது!

## தருமபுரியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் ஆ.மணி எம்.பி. பேச்சு!

தர்மபுரி, நவ. 18-

தர்மபுரி மேற்கு மாவட்டம்,காரிமங்கலம் திமுக மேற்கு ஒன்றியத்துக்குட்பட்ட ஜக்க சமுத்திரம், ஜிட்டாண்டஅள்ளி, மகேந்திர மங்கலம்,பிக்கன அள்ளி, அண்ணாமலைஅள்ளி,எலுமிச்சன அள்ளி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்காளர்களுக்கு தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி காரிமங்கலம் மேற்கு ஒன்றிய செயலாளர் எம்வீடி. கோபால் தலைமையில் நடைபெற்றது.



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் தர்மபுரி நாடாளுமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றதையடுத்து,தமக்கு வாக்களித்து பெருவாரியானவாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி பேசுகையில்,

இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தூள்செட்டி ஏரிகால்வாய் பணிகள் வரும் 2026 சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாகவே நிறைவேற்றப்படும் எனவும்,திராவிட மாடல் அரசின் மக்கள் நல திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைந்து வருவதாக தெரிவித்தார்.

முதலமைச்சர் கழகத்தலைவர் தர்மபுரி மாவட்டத்தை முன்னேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களை அளித்து அதனை செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடாசலம், பாலக்கோடு மத்திய ஒன்றிய செயலாளர் முனியப்பன்,பாலக்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் பி.கே.அன்பழகன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர்,முன்னாள் மாவட்ட அவை தலைவர் தனக்கோடி,வழக்கறிஞர் நஞ்சுண்டன்,மற்றும் ஒன்றிய,கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கிளை கழக செயலாளர்கள்,கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

# பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம்!

## தொகுதி பார்வையாளர் - மாநில கழக விவசாய அணி துணைச் செயலாளர் டி.எம்.அரியப்பன் வேண்டுகோள்!

தருமபுரி, நவ.18-

தருமபுரி மேற்கு மாவட்டம், 57 பாலக்கோடு சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் நடைபெறுவது குறித்து தொகுதி பார்வையாளர், மாநில விவசாய அணி துணை செயலாளர் டி.எம். அரியப்பன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க தமிழக துணை முதல்வர் உதயநிதி ஈஸ்டாலின் அவர்கள், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் - தருமபுரி பொறுப்பு அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர், வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் ஆலோசனைக்கிணங்க ஒன்றிய கழகச் செயலாளர்கள் காரிமங்கலம், மத்திய ஒன்றியம் இல. கிருஷ்ணன், காரிமங்கலம் மேற்கு எம்.வி.டி. கோபால், காரிமங்கலம் கிழக்கு அடிலம் அன்பழகன், பாலக்கோடு மேற்கு ஒன்றியம் பி.கே. அன்பழகன், பாலக்கோடு மத்திய ஒன்றியம் முனியப்பன், பாலக்கோடு பேரூர் கழக செயலாளர் பி.கே.முரளி, காரிமங்கலம் பேரூர் கே.வி.சீனிவாசன், மாரண்ட அள்ளி பேரூர் எம். வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் முகாம் ஆய்வு நிகழ்ச்சியில் தேர்தல் பொறுப்பாளராகிய நான் தங்களுடன் கலந்து ஆலோசித்திட ஆய்வு சுற்றுப்பயண விபரப் பட்டியலையும் இறுதி செய்து தங்களுக்கு அனுப்பியுள்ளேன்.

மேற்கண்ட வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் ஆய்வு நிகழ்ச்சியில் பின்வருமாறு உள்ள படி அமைத்துத் தந்து உதவி செய்யும்படி உங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்ட ஆய்வுக் கூட்டத்திற்கு கட்டாயமாக முகவர்கள் (BLA 2) பொறுப்பாளர்கள் தங்களின் வாக்குச்சாவடியில் உள்ள வாக்காளர்களின் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான அனைத்து விவரங்களையும் சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அனைத்து பாக முகவர்களும் தங்களுக்குரிய வாக்குச்சாவடியில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர்களின் வரைவு பட்டியலையும் வைத்திருக்க வேண்டும்.

நிகழ்ச்சியில் ஒன்றிய / பேரூர் கழகத்தின் அனைத்த நிர்வாகிகளும் கட்டாயம் கலந்து கொள்ள அறிவுறுத்த வேண்டுகிறேன். தவறும் பட்சத்தில் அதற்குரிய காரணத்தை எனக்கு தனி தபாலில் தெரிவிக்க வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

தேதி, ஒன்றியம் / பேரூர் மற்றும் நேரம் விவரம் வருமாறு:- 16.11.2024 - காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம், காரிமங்கலம் மேற்கு, காரிமங்கலம் மத்தியம், காரிமங்கலம் பேரூர் - காலை முதல் மாலை வரையும்

17.11.2024 - பாலக்கோடு மத்திய ஒன்றியம், பாலக்கோடு மேற்கு ஒன்றியம், பாலக்கோடு பேரூர், மாரண்ட அள்ளி பேரூர் - காலை முதல் மாலை வரையும் நடைபெற்றது.

மேற்கண்ட குறிப்புகளை செயல்படுத்தி, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு முகாம் ஆய்வு நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்த அனைத்து ஒன்றிய / பேரூர் நிர்வாகிகளும் ஆதரவு தரும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.எம். அரியப்பன் கேட்டுக்கொண்டுள்ளார்.



தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அரசு போக்குவரத்து கழகம் பணிமனையில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய ஓய்வு அறை துவக்க விழா நிகழ்வு போக்குவரத்து துறை துணை மேலாளர் (தொழில்நுட்பம்) சங்கரநாராயணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ.பங்கேற்று தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் முன்னிலையில் துவக்கி வைத்தார்.நிகழ்வில் போக்குவரத்து துறை ஒழுங்கு நடவடிக்கை மேலாளர் மாரியப்பன்,சங்கரன்கோவில் கிளை மேலாளர் பாலசுப்பிரமணியன்,ஒன்றிய குழு தலைவர்,ஒன்றிய செயலாளர் லாலா சங்கரபாண்டியன், நகராட்சி ஆணையாளர் சபாநாயகம்,தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு,மாவட்ட பொருளாளர் இல.சரவணன்,துணை செயலாளர் புனிதா, பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி,நகரச் செயலாளர் பிரகாஷ், துணைச் செயலாளர் முத்துக்குமார்,அவைத் தலைவர் முப்புடாதி,தொ. மு.ச.சங்கர் ராஜ், குருசாமி,ராஜ்,செல்வகுமார், சிவராமச்சந்திரன்,வீரகுமார், செந்தில்குமார், முருகன், நெல்சன்,பண்டாரக்கண்ணு, கணேசன்,வசந்தராஜ், வேலுச்சாமி,மின்வாரிய மகாராஜன்,மாவட்ட பிரதிநிதி ஸ்தோவான்,மாணவர் அணி உதயகுமார்,சுற்றுச்சூழல் அணி ஜலால்,அஜய் மகேஷ் குமார், ஜெயகுமார்,சிவாஜி,பாலாஜி, விக்னேஷ்,முபின்,கோதர்,ஜான், கே.எஸ்.எஸ்.மாரியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆலோசனையின்படி கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை மாவட்ட இளைஞரணி சார்பாக எழுச்சியுடன் கொண்டாடுவது குறித்த ஆலோசனை கூட்டம் உசிலம்பட்டியில் மாவட்ட அமைப்பாளர் விமல் தலைமையில் நடைபெற்றதில் நகரச் செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கபாண்டியன் சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் முத்துராமன், சுதாகரன், அஜித் பாண்டி, பழனி, குபேந்திரன், கல்யாணி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜெகநாதன், ஜெகதீஷ், ராஜதுரை மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

### நிவேதா எம்.முருகன், மன்னை த.சோழராஜன் சிறப்புரை!

# பூம்புகார் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## குத்தாலம் பி.கல்யாணம், ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன் பங்கேற்பு!

மயிலாடுதுறை. நவ. 18-

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி வாக்குச்சவாடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனை கூட்டம் செம்பனார்கோயில், கோமலில் நடைபெற்றது. கூட்டங்களில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், தொகுதிபார்வையாளர் மன்னை த.சோழராஜன் சிறப்புரையற்றினார்கள்.

செம்பனார்கோயிலில்

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம், தரங்கம்பாடி பேரூர் மற்றும் சீர்காழி கிழக்கு ஒன்றியம் ஆகிய வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனை கூட்டம் செம்பனார்கோயில் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி பேசினார். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன் வரவேற்றார்.செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர்கள் எம். அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியச் செயலாளர் அமிர்த விஜயகுமார், சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சுகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் எம்.எம்.சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், ஜெ.கபிலன், சுபா நெடுஞ்செழியன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என்.செந்தில், ஒன்றியக் குழு துணைத்தலை வர் பாஸ்கர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கர குமரவேல், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் சுப்பையன், எஸ்.தென்னரசன், வி.ஆர். பிரபாகரன், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் மணிமாறன், சிவக்குமார், சங்கர், தெஷ்ணாமூர்த்தி, கணேசன் செம்பனார்கோயில் தெற்கு நிர்வாகிகள் கே.எஸ்.கருணா, தரங்கம்பாடி பேரூர் மாவட்ட பிரதிநிதி பொன்.ராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, பேரூர் கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள், வாக்குச்சாவடி முகவர்கள்(பி.எல்.ஏ.2) கலந்து கொண்டனர்.

கோமலில் பூம்புகார் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட குத்தாலம் மேற்கு, குத்தாலம் கிழக்கு, குத்தாலம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வாக்குச்சவாடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆலோசனை கூட்டம் கோமலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். குத்தாலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா வரவேற்றார். கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம்.சங்கர், குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் பணிகள் குறித்து பேசினார். கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.என்.ரவி, குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், துணைத் தலைவர் முருகப்பா, மாவட்ட சுற்று சூழல் அணி அமைப்பாளர் சௌமியன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி பாலமுருகன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிரபாகரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வாக்குச்சவாடி முகவர்கள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி சார்பில் “முத்தமிழறிஞர் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் வடசேரி, அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், ரெ.மகேஷ் முகாமை துவக்கி வைத்தார். முகாமில் பொது மருத்துவம், சர்க்கரை நோய், இதய நோய், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை உட்பட பல்வேறு நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களிடம் மாநகராட்சி மேயர் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைத்தார். முகாமில் மண்டல தலைவர் இ.ஜவகர், மருத்துவர்கள் ஐ.அஜய் மஞ்சு, மேரி லதா, அஸ்வின் பிரதீப், சிவரஞ்ஜினி, மாமன்ற உறுப்பினர் எம்.சுனில்குமார், ப. பன்னீர் செல்வம், பி.வேல்முருகன், வி.அகஸ்தீசன் உட்பட செவிலியர்கள், பொது மக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. முகமது அலி

**நவம்பர் 18 (2013)**



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு வீட்டுவசதி அடமான வங்கி இயக்குநர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**